# ஐ.டி. நினைவுகள் (1)

வாய்ப்பைக் காட்டியது
வசதியைக் காட்டியது
வேறென்ன வேண்டும்
வா என்றது நகரம்;

படித்தது போதும் - புரட்டிய
பக்கங்கள் போதும்
நாலு காசு சேர்க்கலாம்
நாமும் வசதியாய் வாழலாம் என
வந்து சேர்ந்தேன் நானும்;

பி.ஜி. தங்கல்கள்
சி.வி. தயாரிப்புகள்
ஆன்லைன் தேடல்கள்
உறவினர் நண்பர் பரிந்துரைகள்
சிட்டி பஸ் பயணங்கள்
வாக் இன் நேர்முகங்கள்
தலைதட்டிய பணப்பைகள்;

வெறுமை நாட்கள்
வெற்றிட நாட்கள்
தொடங்கும் முன்னமே
தோற்று விடுவோமோ என்று
பயந்த நாட்கள்
எடுத்ததுக் கெல்லாம்
எரிந்து விழுந்த நாட்கள்
தனிமையாய் இரவில்
கண் கலங்கிய நாட்கள்;

முதல் வேலை அழைப்பு
முட்டி முட்டிப் பெற்ற
முதல் அங்கீகாரம்
பறக்கக் கற்ற
குருவிக் குஞ்சு போல்
படபடத்துப் பறந்த மனம்;

கதவுகள் திறந்தன
கனவுகள் அழைத்தன
வந்து விட்டேன் இதோ என
காலடி எடுத்து வைத்தேன்
கார்ப்பரேட் உலகிற்குள்...

(தொடரும்)

அ. சொ
பெங்களூர்
26 டிசம்பர் 2016.